**செ.வெ.எண்:05** **நாள்: 02.10.2019**

# அரியலூர் மாவட்டம், கல்லங்குறிச்சி கிராமத்தில் சிறப்பு கிராம சபைக் கூட்டம் நடைபெற்றது.

அரியலூர் மாவட்டம், அரியலூர் ஒன்றியம், கல்லங்குறிச்சி கிராமத்தில் **அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளை** முன்னிட்டு **சிறப்பு கிராம சபைக் கூட்டம்** நடைபெற்றது. இக்கூட்டத்தில் சிறப்பு பார்ாவையாளர்களாக மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இஆப.,** அவர்கள், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் **திரு.ஜெ.கே.என்.இராமஜெயலிங்கம்** அவர்கள் ஆகியோர்கள் கலந்துகொண்டனர்.

**இக்கூட்டத்தில், மாண்புமிகு அரசு தலைமைற்கொடாற அவர்கள் தெரிவித்ததாவது.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் கடந்த ஜனவரி 1-ம் தேதி முதல் ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியக்கூடிய பிளாஸ்டிக் பொருட்களை தவிர்ப்பதற்கு பல்வேறு நடைவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், திறந்த வெளியில் மலம் கழித்தலை தவிக்க வேண்டும். ஒரு முறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களை தவிர்க்க வேண்டும். பொருட்கள் வாங்க செல்லும் போது நாம் துணி பைகள் எடுத்து செல்ல வேண்டும். நீர் ஆதாரங்களை பெருக்க அனைத்து கட்டிடங்களிலும் மழைநீர் சேகரிப்பு தொட்டிகள் அமைக்க வேண்டும்.

மேலும், கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொது செலவினம் குறித்தும், 2019-2020 ஆம் நிதியாண்டு வளர்ச்சி பணிகளுக்கான திட்ட அறிக்கை ஒப்புதல் பெறுதல் குறித்தும், நீர் வள ஆதார பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மை இயக்கம் குடிமராமத்து பணிகள், குடிநீரை சிக்கனமாகவும், முறையாகவும் பயன்படுத்துதல், கொசுக்கள் மூலம் பரவும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள், ஊராட்சி பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு திட்ட பணிகளின் முன்னேற்றம் மற்றும் நிதி செலவின விபரங்கள், மக்கள் திட்டமிடல் இயக்கம் வெற்றிகரமாக செயல்படுத்திட தீர்மானித்தல், ஊட்டச்சத்து இயக்கம் குறித்தும், பிளாஸ்டிக் பொருட்களின் உற்பத்தி மற்றும் உபயோகத்தினை தடை செய்தல் குறித்தும், உணவு பொருள் வழங்குதல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு, ஜல்சக்தி இயக்கத்தினை மாபெரும் இயக்கமாக செயல்படுத்த தீர்மானித்தல் குறித்தும், தமிழகம் திட்ட செயல்பாடுகள் குறித்தும், கழிப்பறை இல்லாதோர் விவரப்பட்டியல் மற்றும் சுகாதார நலன் கருதி கழிப்பறையை பயன்படுத்த வலியுறுத்தல் குறித்தும், திறந்த வெளியில் மலம் கழிப்பதால் ஏற்படும் தீமைகளை எடுத்துரைத்தல் குறித்தும், திடக்கழிவு மேலாண்மை திட்டம். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட பணிகள், மகளிர் திட்டம்- தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க பணிகள் குறித்தும், ஊரகப்பகுதிகளில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்த, எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும், தீன்தயாள் உபாத்யாய கிராமின் கௌசல் யோஜ்னா திட்டம் குறித்தும், பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்), பிரதம மந்திரி சுரக்ஷா பீமா யோஜ்னா (PMSBY) காப்பீடு திட்டம் மற்றும் அட்டல் பென்சன் யோஜ்னா (APY) திட்டம் குறித்து மக்களுக்கு தெரியப்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது என மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் தெரிவித்தார்கள்.

முன்னதாக, பிளாஸ்டிக் பயன்பாட்டை தவிர்த்தல் குறித்து மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இஆப.,** அவர்கள், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் **திரு.ஜெ.கே.என்.ராமஜெயலிங்கம்** அவர்கள் ஆகியோர்கள் முன்னிலையில் உறுதிமொழி ஏற்கப்பட்டு, பொதுமக்களுக்கு துணிப்பைகள் வழங்கி, தூய்மைப்படுத்தும் பணிகளை தொடங்கி வைத்து, விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) சுந்தர்ராஜன், திட்ட இயக்குநர் (மகளிர்திட்டம்) லலிதா, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) பழனிச்சாமி, இணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் வீ.சி.ஹேமசந்த்காந்தி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் அலுவலர்கள், ஏராளமான பொதுமக்கள் கலந்துகொண்டார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**